*(தொடர்ச்சி)* வாசிக்க: லூக்கா 18:9-14

***"கேளுங்கள்... கொடுக்கப்படும்; தேடுங்கள்... கண்டடைவீர்கள்;***
***தட்டுங்கள்... திறக்கப்படும்" (மத் 7:7)***

மன்றாட்டுச் சொற்பொழிவின் ஜெப வசனங்களை இன்றும் தியானிப்போம்.

□ **மத் 5:44,** "உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்."

கிறிஸ்தவ வாழ்வில் கீழ்ப்படிந்தால் களிப்பு, மறுத்தால் களைப்பு. கிறிஸ்துவின் கட்டளைகள் அநியாயமானவைகளோ, சாத்தியமற்றவைகளோ அல்ல. நம்மை விரோதிப்போருக்காக ஜெபிக்கத் துவங்கியதும் அவர்களை நேசிக்கத் தேவையான தேவ அன்பு நம்மீது பொழியும். வேண்டுமென்றே தேவன் நம்மைக் கடினமான சிலரோடு வைக்கிறார். பயிற்சியில் அது ஒரு முக்கிய பாடம். எதிர்ப்பும் புரியாமை யுமுள்ள சூழலுக்குப் போதுமான கிருபையை ஜெபிக்கும்போது பெறுகிறோம்.

□ **மத் 6:5,6,** "நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்கவேண்டாம்; அவர்கள் மனிதர் காணும்படி ... ஜெபம்பண்ண விரும்புகிறார்கள் ... நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் நுழைந்து, உன் கதவைப் பூட்டி, மறைவி லிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு."

பிற ஆன்மீகப் பழக்கங்களைவிட ஜெபத்தை மிக எளிதாக, வெளிப்பகட்டுக்காய்ச் செய்துவிடமுடியும். தினமும் இத்தனை மணி நேரம் ஜெபிக்கிறேன் எனச் சொல்லித் திரிவது பரிசேயத்துவம்! மனிதப்புகழ் நாடினால் வேறொன்றும் கிடைக்காது. ஜெப வாழ்வு வெறும் பொருட்காட்சியாகிவிடும். ஜெபிப்பதற்காக சந்தடியற்றதோர் ஒதுக்கிடம் தேவை. இரகசியமாய் ஜெபிப்பதே ஜெபிப்பதின் இரகசியம்; அந்தரங்க ஜெபம் நமது அரங்க வாழ்வை ஆசீர்வதிக்கும்!

□ **மத் 6:7,8,** "நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல் வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள் ... உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்."

தேவனுக்குத் தெரியாததை அவருக்குத் தெரிவிப்பதல்ல ஜெபம். மாறாக, அது நமது உணர்வுகளைத் தந்தையிடம் குழந்தைபோல் கொட்டுவதாகும். எளிய ஜெபங்கள் மகிமையானவை! ஆயக்காரனின் ஜெபம் எத்தனை மகிமையானது— "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (லூக் 18:13). குழந்தையின் தேவையனைத்தும் தந்தைக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் குழந்தை கேட்பது அவருக்கு மனக்குளிர்ச்சி. அதுதான் உறவுக்கு உயிரூட்டுகிறது. சேய்க்குப் பால் கொடுக்கவேண்டிய வேளையைத் தாய் அறிவாள்; ஆனாலும் அழுகுரல் கேட்டதும் அணைத்தூட்டுவாள் அல்லவா?

*உண்மை மனதோடுன்னைக் கெஞ்ச — உல*
*கெண்ண மெல்லாம் அகற்றி உரிமையே மிஞ்ச,*
*தொன்மை ஆயக்காரன் போலஞ்ச — பவ*
*தோஷமகலத் திருரத்தம் உள்ளிஞ்ச! (கீர்த்தனை)*
*— சா. சீமோன் ஐயர், மதுரை*